

# பெற்றோருக்கான தகவல்

## அடிப்படைப் பாடசாலையில் மதிப்பீடும் மத்தியதர நிலை I இற்கான வகுப்பேற்றமும்

2005ம் ஆண்டு திருத்தம் செய்யப்பட்ட பதிப்பு

கல்வித் திணைக்களம் பேர்ண் மாநிலம்

அன்புள்ள பெற்றோருக்கு,

எவ்வாறு உண்மையில் எங்கள் பாடசாலைகளில் மாணவர்கள் வகுப்பேற்றப் பட்டுக்கொண்டிருக்கின்றனர்? யார் இந்த மதிப்பீடுகளைச் செய்கின்றனர் மற்றும் ஏன் இதைச் செய்கின்றனர்? ஒரு பாடசாலைத் தொடர்வழியைத் தீர்மானித்தல் என்பதூடு எதை புரிந்துகொள்கின்றனர்? இதையிட்டு என்ன தீர்மானிக்கப்படும் மற்றும் யார் தீர்மானிக்கின்றனர்? இறுதியில் எவ்வாறு இந்த ஆரம்பநிலையில் இருந்து மத்தியதர நிலை I இற்கு வகுப்பேற்றும் நடவடிக்கை நிகழ்கின்றது, வகுப்பேற்ற அறிக்கைப்பதிவு என்றால் என்ன, எதற்காக ஒரு வகுப்பேற்ற கலந்துரையாடல் நடைபெறுகின்றது மற்றும் யார் வகுப்பேற்றத் தீர்மானத்தை எடுக்கின்றனர்?

சுருக்கம்: உங்கள் பிள்ளையின் பாடசாலைத் தொடர்வழியைப் பற்றி நீங்கள் எதை அறியவேண்டும்?

உங்கள் முன் வைக்கப்பட்டுள்ள இந்த தகவற்பிரசுரம் இவ்வினாக்களுக்கான விடைகளை வழங்கும். நீங்கள் பேர்ண் அரச பாடசாலையில் கற்கும் மாணவரின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் என்பதால் இத்தகவற்பிரசுரம் உங்களுக்காகத் தயாரிக்கப்பட்டுள்ளது. ஒருவேளை உங்களிற்கு மேலதிக தகவல்கள் தேவைப்பட்டால், தயவு செய்து உங்கள் பிள்ளையின் வகுப்பாசிரியரிடம் அல்லது பாடசாலை அதிபரிடம் வினாவவும்.

கல்வி திணைக்களம்

## கற்றல் குறிக்கோள்கள்

கற்றல் குறிக்கோள்கள் ஒவ்வொரு பயனுள்ள பாடசாலைக் கற்பித்தலுக்கும் உரிய நிபந்தனைகளை கட்டியெழுப்புகின்றன. பேர்ண் மாநில பாடத்திட்டத்தின் வழிகாட்டி நேர்த்தியில்லாத குறிக்கோளைக் குறிக்கும் வடிவத்தில் உள்ளது. இவ் நேர்த்தியில்லாத குறிக்கோளை குறிப்பிட்ட மாணவருக்கு மற்றும் மாணவர் குழுவிற்கு கற்றல் குறிக்கோளாக மாற்றுவது நேரம், பாடஅலகு போன்றவற்றில் தங்கியுள்ள ஆசிரியரின் வேலையாகும். இவர்கள் ஒவ்வொரு கற்றல் குறிக்கோளினூடும் எத்திறமையை மாணவர் அடைதல் வேண்டும் என்பதை தரம் மற்றும் பாடம் ஆகியவற்றை வைத்து உறுதிப்படுத்துவர்.

மாணவர்கள் கற்றல் குறிக்கோளை அடைந்துள்ளனரா என்பதை சரிபார்ப்பதற்கு பலவிதமான மதிப்பீட்டு முறைகள் உள்ளன (தொடரும் தலையங்கத்தைப் பார்க்கவும்). இம்மதிப்பீடுகள் பாடசாலைத் தொடர்வழியைத் தீர்மானிப்பதற்கான அடிப்படையைக் கட்டியெழுப்பும். முதலாவது முக்கியமான பாடசாலைத் தொடர்வழித் தீர்மானம் 6ம் பாடசாலை ஆண்டின் இறுதியில் ரே-ஆல் அல்லது நடுத்தரப் பாடசாலை மணவன் அல்லது மாணவியாக வகுப்பேற்றப்படும் போது மேற்கொள்ளப்படும்.

## மாணவர் மதிப்பீடு

மாணவரின் பாடஅறிவுத் திறமை மற்றும் நடத்தை போன்றவற்றை ஆசிரியரினூடாக மதிப்பிடுவது நாளாந்த பாடசாலை வாழ்க்கைக்கு உரித்துடையது. இவை பிரத்தியேக உதவிக்கான சேவையை வழங்குவதுடன் பாடசாலை தகமையில் விருத்தியையும் தனிப்பட்ட கற்றலுக்கு ஆதரவையும் வழங்குவதாய் இருத்தல் வேண்டும்.

மாணவருடைய மதிப்பீடுகள் உதவியளிக்கக்கூடியதாக, கற்றல் குறிக்கோளை நோக்கியதாக, முழுமையாக அதனால் சுயவிமர்சனம் மற்றம் எதிர்காலத்தை நோக்கியதாக அத்துடன் வெளிப்படையாக இருக்கவேண்டும்.

- **உதவியளிப்பது:** மதிப்பீடுகள் சிறாரினதும், இளம்வயதினரதும் கற்றல் விருத்திக்கு ஆதரவளிக்கின்றன.

- **கற்றல் குறிக்கோளை ஒழுங்குபடுத்துவது:** மதிப்பீடுகள் ஏற்கனவே கற்றவற்றை, முன்பு கற்கவேண்டும் என திட்டம் இடப்பட்டவற்றுடன் ஒப்பிடும் சேவையையும் வழங்குகின்றன.

- **சுயவிமர்சனம் செய்வது:** மதிப்பீடுகள் சிறார்களிற்கும், இளம்வயதினருக்கும் தங்களைத் தாங்களே மதிப்பிடும் சந்தர்ப்பமளிக்கின்றன.

- **எதிர்காலத்தை நோக்குவது:** மதிப்பீடுகள் சிறார்களிற்கும், இளம்வயதினருக்கும் தொடர்ந்து செல்லக் கூடிய பாடசாலையைத் தீர்மானிக்கும் அடிப்படையை வழங்குகின்றன.

- **வெளிப்படைகவிருப்பது:** மதிப்பீடுகள் பெற்றோருக்கு அல்லது பாதுகாவலருக்கு அவர்களின் மகள் அல்லது மகனின் கற்றல் முன்னேற்றம் மற்றும் விருத்தி பற்றிய வேறுபடுத்தப்பட்ட மற்றும் முழுமையான தகவலளிக்கும்.

### மாணவரின் மதிப்பீட்டு வடிவங்கள்:

- **வழிகாட்டப்பட்ட அவதானமும், மதிப்பீடும்:** மாணவர்கள் தங்கள் ஆசிரியர்களால் கிரமமாக அவதானிக்கப்பட்டு, பரிசோதிக்கப்படுவர். பின்வரும் வினாக்களுக்கு திரும்பத் திரும்ப விடையளிக்க முடியுமானால் அனுபவங்களும், பெறுபேறுகளும் இதனூடு பங்களிக்க முடியும்: ஏற்கனவே விதிக்கப்பட்ட கற்றல் குறிக்கோளை நோக்கிய அறிவுநிலையின் விருத்தி எவ்வாறுள்ளது? பாடசாலையில் நடத்தையின் விருத்தி எவ்வாறுள்ளது, எவ்வகையான குணாதிசயங்கள் மற்றும் எப்பலம், பலவீனம் அடையாளப்படுத்தலாய் வெளிப்படுத்தப்-படுகின்றது? இப்பரிசோதனைகளினதும், அவதானங்களினதும் பெறுபேறுகள் ஆசிரியர்களிற்கு பொருத்தமான உதவியளிக்கும் அளவீட்டை எடுப்பதற்கும், கலந்துரையாடலில் திட்டமான ஆலோசனைகளையும், விபரங்களையும் வழங்குவதற்கு உரிய சேவையையளிக்கும்.

• ***சுயமதிப்பீடு:*** சுயமதிப்பீட்டினூடு மாணவர்கள் தங்களே தங்கள் பாடஅறிவுத் திறமை மற்றும் தங்கள் வேலை-, கற்கும் அத்துடன் சமூக நடவடிக்கைகளையும் ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட கற்றல் குறிக்கோளின் அடிப்படையில் மதிப்பிடுவர். இவை பல வடிவங்களில் நடைமுறைப்படுத்தக் கூடும்: தனித்தனியான அல்லது குழுக்களாலான கலந்துரையாடலாக; கால்வருட, அரைவருட அல்லது வருட மீள்பார்வையாக; கிழமைத் திட்டத்தின் மறுஅறிவித்தலாக; தொழிற்பட்டறை அல்லது வேலைத்திட்டங்களாக. சுயமதிப்பீடுகள் ஆசிரியரின் மதிப்பீட்டைத் தொடரும், ஆனால் இவை வருடத்தில் ஆகக்குறைந்தது ஒரு வருடம் நடைபெறும். இவை மாணவருடன் கலந்துரையாடும் போது, உதவியை வழங்கும் நோக்கை உடைய மதிப்பீடு செய்யப்படும்.

• ***பெற்றோர் கலந்துரையாடல்:*** பெற்றோருடன் கலந்துரையாடல் நம்பிக்கையை உருவாக்கும், பாடசாலைக்கும், பெற்றோரின் இல்லத்திற்கும் இடையிலான இணைந்தவேலைக்குரிய மைய ஊடகம். இவை ஆகக்குறைந்தது வருடத்தில் ஒரு தடவை நடைபெறும். இவற்றால் பெற்றோருக்கும் அல்லது பாதுகாவலருக்கும், ஆசிரியர்களுக்கும் இடையேயான பிரத்தியேக தொடர்பைப் பேணமுடியும். இவை மகள் அல்லது மகனைப் பற்றியும், பாடசாலையில் அவர்களில் சமூக நடத்தையைப் பற்றிய தகவல்களை பரிமாறும் சேவையையும் வழங்கும். இவை சுயமதிப்பீட்டை பிறமதிப்பீடான ஆசிரியர் மதிப்பீட்டுடனும், பெற்றோரின் பார்வையையும் ஒப்பிடும் சந்தர்ப்பமளிக்கும். இவை பிரச்சனையான சந்தர்ப்பங்களிலும் அல்லது முரண்பாடுகளில் நேரடியாக பேசுவதை இலகுவாக்கும். அத்துடன் பொதுவான தீர்மானத்தைப் பெறவழிவகுக்கும். இந்த இடத்தில் உதவியளித்தல் மற்றும் கற்றல் குறிக்கோளை நோக்கிய திறமை மதிப்பீடு, தொடர்வழி தீர்மானம் அத்துடன் சமூகநடத்தை மதிப்பீடு போன்றவை விவாதிக்கப்படுகின்றது.

ஆரம்பநிலையில் மதிப்பீடு முதலாம் தவணையின் இறுதியில் பெற்றோருடன் கலந்துரையாடல் என்னும் வடிவத்தில் நடைமுறைப்படுத்தப்படும். 6ம் வகுப்பில் பெற்றோர் கலந்துரையாடல் அதேநேரத்தில் வகுப்பேற்ற கலந்துரையாடலாகவும் (8ம் பக்கம்) இருக்கும். மத்தியதர நிலை I இல் இந்த பெற்றோர் கலந்துரையாடல் எதாவது தொழிற்தெரிவைப் பற்றிய தீர்மானம் எடுப்பது அல்லது ஒரு தொடரும் பாடசாலைக்குச் செல்வதற்கு முன் ஆயத்தம் செய்வததைப் பற்றிய உபயோகமான, கவனத்தில் எடுக்கப்படும் விடயங்கள் பகிரப்படுமாயின் நடைபெறும். பாடசாலை முரண்பாடுகள் அல்லது வழமைக்கு மாறான நிகழ்வுகளின் போதும் மேலதிக பெற்றோர் கலந்துரையாடலை வழங்கக்கூடும். பெற்றோர் அல்லது பாதுகாவலர் ஓர் எழுத்து மூலமான தகவல் வழங்குவதனூடாக இவ்வாறான பெற்றோர் கலந்துரையாடலை இரத்து செய்ய உரித்துடையவர்.



• ***மதிப்பீட்டு அறிக்கை:*** ஆரம்பநிலை பாடசாலை ஆண்டின் இறுதியில் அல்லது மத்தியதர நிலை I இல் ஒவ்வொரு தவணை இறுதியிலும் பெற்றோர் அல்லது பாதுகாவலர் மதிப்பீட்டு அறிக்கை வடிவிலான ஓர் எழுத்துமூல மறுஅறிவித்தலை பெறுகின்றனர். இந்த அறிக்கை ஒரு பக்கம் பாடஅறிவுத்திறன் மதிப்பீடாகவும், மறுபக்கம் வேலை மற்றும் கற்கும் நடவடிக்கைளின் மதிப்பீடாகவும் இருக்கின்றது. இது எவ்வாறு ஒவ்வொரு பாடத்திலும் கற்றல் குறிக்கோள் அடையப்பட்டுள்ளது என்ற தகவல்களை வழங்குகின்றது. 3ம் பாடசாலை ஆண்டில் இருந்து பாடஅறிவுத்திறன் புள்ளிகளால் மதிப்பீடு செய்யப்படும்.

மதிப்பீடு பின்வரும் ஒழுங்கில் நடைபெறும்:

1ம், 2ம் பாடசாலை ஆண்டுகளில் பின்வரும் சொல்வடிவில் மதிப்பீடு அமையும்.

| sehr gut | gut | genügend | ungenügend |
|---|---|---|---|
| மிக நன்று | நன்று | போதும் | போதாது |

3ம் பாடசாலை ஆண்டு தொடக்கம் ஒவ்வொரு பாடத்தினதும் முழுமையான மதிப்பீடு பின்வரும் முழுமையான மற்றும் அரைப் புள்ளிகளாக அமையும்.

புள்ளிகள் பின்வரும் அர்த்தத்தைக் கொண்டுள்ளன:

| | | |
|---|---|---|
| 6 | மிக நன்று | கற்றல் குறிக்கோள் அடையப்பட்டுள்ளது. |
| 5 | நன்று | |
| 4 | போதும் | |
| 3 | போதாது | கற்றல் குறிக்கோள் அடையப்படவில்லை. |
| 2 | குறைவு | |
| 1 | மிகக்குறைவு | |

## மதிப்பீடுகள் ஒரு நோக்கு

| | | 1ம் தவணை | 2ம் தவணை |
|---|---|---|---|
| ஆரம்பநிலை | 1+2பாடசாலை ஆண்டு | பெற்றோர் கலந்துரையாடல் | மதிப்பீட்டு அறிக்கை (புள்ளிகள் அற்றது) |
| | 3–5ம் பாடசாலை ஆண்டு | பெற்றோர் கலந்துரையாடல் | மதிப்பீட்டு அறிக்கை (புள்ளிகளுடன்) |
| | 6ம் பாடசாலை ஆண்டு | வகுப்பேற்ற அறிக்கை<br>வகுப்பேற்ற அறிக்கைபதிவு<br>வகுப்பேற்ற கலந்துரையாடல் | வகுப்பேற்ற தீர்மானம்<br>மதிப்பீட்டு அறிக்கை (புள்ளிகளுடன்) |
| மத்தியதர நிலை I | 7-9ம் பாடசாலை ஆண்டு | மதிப்பீட்டு அறிக்கை (புள்ளிகளுடன்)<br>பெற்றோர் கலந்துரையாடல் (காலம் சுயமாக தீர்மானிக்கக்கூடிய) | மதிப்பீட்டு அறிக்கை (புள்ளிகளுடன்) |

வழிகாட்டப்பட்ட அவதானமும், ஆசிரியரினூடான மதிப்பீடும் , மாணவரின் சுயமதிப்பீடும் பாடசாலைக் காலம் முழுவதும் நடைபெறும். ஆசிரியர்களின் தீர்மானத்திற்கு ஏற்ப சுயமதிப்பீடுகள் நிகழும்.

## பாடசாலைத் தொடர்வழி தீர்மானம்

ஆசிரியரின் மதிப்பீட்டு அறிக்கை, மாணவரின் சுயமதிப்பீடு மற்றும் பெற்றோர் கலந்துரையாடல் ஆகியவை பாடசாலைத் தொடர்வழியைத் தீர்மானம் செய்யும் அடிப்படையை வழங்கும்.

### பாடசாலைத் தொடர்வழி தீர்மானம் என்றால் என்ன?

ஒரு குறிப்பிட்ட மாணவன் அல்லது மாணவிக்கு எந்த தொடரும் வழி மிகவும் பொருத்தமானது என்று வினாவி பெறும் ஒரு ஒன்றுசேர்க்கப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் எழுவது பாடசாலைத் தொடர்வழி தீர்மானம்.

- **ஆரம்பநிலையில்** மதிப்பீடு அனைத்துப் பாடங்களின் பாடஅறிவுத் திறன் மதிப்பீட்டில் தங்கியுள்ளது. மாணவன் அல்லது மாணவியின் வேலை மற்றும் கற்கும் நடவடிக்கைகளின் மதிப்பீடும் திறமை மதிப்பீட்டை நிரப்பும்.

- **மத்தியதர நிலை I** இல் இவ்வாறே அனைத்து கட்டாய பாடங்களின் பாடஅறிவுத் திறன்கள் மதிப்பீடு செய்யப்படும். அத்துடன் இங்கும் வேலை, கற்கும் நடவடிக்கைகளின் மதிப்பீடும் உள்ளது.

பொது விதிப்படி மாணவர்கள் தற்பொழுது செல்லும் பாடசாலை மாதிரியின் அல்லது கிரமமாக திறமைத் தரத்தின் படி அடுத்த பாடசாலை வருடத்திற்கு அல்லது அடுத்த தவணைக்கு வகுப்பேற்றப்படுகின்றனர். இந்த அடிப்படை விதிகளில் இருந்து பாடசாலைத் தொடர்வழி தீர்மானங்கள் மாறுபடும் உதாரணங்கள்: பிரத்தியேக கற்றல் குறிக்கோளை அடைய வேலையை குறைக்க அல்லது கூட்ட நேரிடும் ( சிறார்கள் அல்லது இளம்வயதினர் கற்கும் சிக்கல் உள்ளவர்களிற்கு அதேபோன்று விசேட திறமையைக் கொண்டவர்களிற்கு), ஒரு விசேட வகுப்பிற்கு வகைப்படுத்தப்படும்போது, ஒரு பாடசாலை வருடத்தை திரும்பவும் கற்கும் போது அல்லது ஒரு பாடசாலை வருடத்தை விட்டு வகுப்பேற்றப்படும் போது. மத்தியதர நிலை I இல் ஜெர்மன், பிரெஞ்சு மற்றும் கணித பாடங்களின் திறமைத் தரத்தில் இருந்து மாற்றப்படும் போதும் இது செல்லுபடியாகும். இதேபோன்று மத்தியதர பாடசாலைகளிற்கான ஆயத்தம் செய்வதற்கு அனுமதிக்கப்படும்போதும் அதனின்று நீக்கப்படும்போதும் அல்லது 9ம் வகுப்பில் ஜிம்நாசிய பாடங்களைக் கற்க அனுமதிக்கப்படும்போதும் பாடசாலைத் தொடர்வழி தீர்மானமாக இந்நடைமுறை செயற்படுத்தப்படும்.



### எப்பொழுது பாடசாலைத் தொடர்வழி தீர்மானங்கள் நடைபெறும்?

பாடசாலைத் தொடர்வழி தீர்மானங்கள்

- **ஆரம்பநிலையில்** பொதுவாக பாடசாலை ஆண்டின் இறுதியில்,

- **மத்தியதர நிலை I** இல் ஒவ்வொரு தவணை இறுதியிலும் நடைபெறும்.

### யார் பாடசாலைத் தொடர்வழி தீர்மானங்களை ஏற்படுத்துவர்?

ஆசிரியர் குழுவின் விண்ணப்பத்தின் பேரில் பாடசாலைக் குழு பாடசாலைத் தொடர்வழி தீர்மானத்தை ஏற்படுத்தும். இவை மதிப்பீட்டு அறிக்கையை வரையறையாக வைத்து பெற்றோருடன் அல்லது பாதுகாவலருடன் எழுத்துமூலம் பகிரப்படும். ஒவ்வொரு தீர்மானமும் சட்டவழியின் படி அதாவது மேல்முறையீடு செய்யும் சாத்தியத்தைக் கொண்டதாக ஒழுங்கமைக்கப்படும், (பத்திரங்கள் உள்ள கோப்பைப் பார்க்கவும்).

வெவ்வேறு பாடசாலைத் தொடர்வழி தீர்மானங்களுக்குரிய நடவடிக்கைகள் வேறுபட்டவை அத்துடன் ஒவ்வொரு விசேட சந்தர்ப்பங்களுக்கும் பொருத்தமாகவும் இருக்கும். ஒவ்வொரு தடவையும் பெற்றோர் அல்லது பாதுகாவலர் இதில் அங்கம்வகிப்பார்கள் மற்றும் அவர்களின் எண்ணங்களும் தீர்மானத்தில் உள்ளடக்கப்படும்.

## ஆரம்பநிலையில் இருந்து மத்தியதர நிலை I இற்கு வகுப்பேற்றும் நடவடிக்கைகள்

### ஆரம்பநிலையும், மத்தியதர நிலை I உம்

(Primarstufe und Sekundarstufe I)

முன்பு «ஆரம்பபாடசாலை (Primarschule)» மற்றும் «மத்தியதர பாடசாலை (Sekundarschule)» என்ற எண்ணக்கருத்து 5ம் வகுப்பிற்கு மேல் வேறுபட்ட கற்கும் வழியைக் குறிக்கும் - ஒருவர் ஒன்றில் ஆரம்பபாடசாலைக்கு அல்லது மத்தியதர பாடசாலைக்குச் செல்வர் -, இன்று இதேபோன்ற எண்ணக்கருத்து ஒரு புதிய சிந்தனையில் பயன்படுத்தப்படுகின்றது.

- **ஆரம்பநிலை** (Primarstufe) என்பது 1 தொடக்கம் 6 வரையான பாடசாலை ஆண்டுகளைக் குறிக்கும். ஆரம்பநிலையில் அனைத்துப் பிள்ளைகளும் ஒருமித்துக் கற்பிக்கப்படுவர்.

- **மத்தியதர நிலை I** (Sekundarstufe I) என்பது செல்லும் வழியிலோ அல்லது செல்லும் திறமைத் தரத்தினிலோ, பாடசாலை மாதிரியிலோ தங்கியிராமல் அனைத்து 7 தொடக்கம் 9 வரையான பாடசாலை ஆண்டுகளையும் குறிக்கும்.

மத்தியதர நிலை I இல் மாணவர்கள் ஒன்றில் ஒரு ரே-ஆல் வகுப்பிற்கு (Realklasse) அல்லது ஒரு நடுத்தரவகுப்பிற்கு (Sekundarklasse) அல்லது ரே-ஆல் அத்துடன் நடுத்தரவகுப்பு மாணவர்களாகக் கற்பிக்கப்படும் ஓர் வகுப்பிற்குச் செல்வர். ரே-ஆல் மற்றும் நடுத்தரவகுப்பு மாணவர்கள் தனித்தனியாகவா அல்லது ஒருமித்தா கற்பிக்கப்படவேண்டும் என்பதை ஒவ்வொரு கிராமசபையும் சுயமாகத் தீர்மானிக்கும். சில தனியான மேல்நிலை மையங்கள் ஒரு விசேட நடுத்தரபாடசாலைத் திறமைத் தரத்தை (Spezielles Sekundarschulniveau) வழங்கும். இது உயர்ந்த மத்தியதர பாடசாலைகளிற்கு (Mittelschulen) வகுப்பேற்ற முன்னாயத்தம் செய்யும்.

பொதுவாக நடுத்தரப் பாடசாலைக்கு வகுப்பேற்றம் செய்யப்படுவது 6ம் பாடசாலை ஆண்டின் இறுதியில் நடைபெறும். முதலாவது ரே-ஆல் பாடசாலை ஆண்டின் இறுதியில், அதாவது 7ம் வகுப்பு இறுதியிலும் மாற்றப்படுவதற்கு சந்தர்ப்பமுண்டு. ரே-ஆல் மற்றும் நடுத்தரப் பாடசாலை மாணவர்கள் ஒருமித்து கற்பிக்கப்படும் பாடசாலைகளில் வகுப்பேற்றம் அல்லது நிலைஇறக்கம் அடிப்படையில் ஒவ்வொரு தவணையின் பின்னரும் நடைபெறும் சாத்தியமுண்டு.

நடுத்தரப் பாடசாலைகளில் ரே-ஆல் பாடசாலைகளிலும் விட உயர்ந்த நிபந்தனைகள் முன்வைக்கப்படும். எனவே இங்கு இந்த உயர்ந்த நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய சாத்தியமுள்ள மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர். நடுத்தரப் பாடசாலையின் 9ம் பாடசாலை ஆண்டில் சிபாரிசு செய்யப்பட்ட மாணவர்கள் ஜிம்நாசிய பாடங்களைக் கற்க ஆரம்பிப்பர்.

மேற்குறிப்பிட்ட வகுப்பேற்ற நடவடிக்கைகள் செல்லுபடியாகும்படி மத்தியதர நிலை I இற்கு வகுப்பேற்றப்பட்ட பின்னர் ஓர் மாணவி அல்லது மாணவன் நடுத்தரப் பாடசாலையில் அல்லது ரே-ஆல் பாடசாலையில் இருக்கமுடியும்.

நடுத்தர மற்றும் விசேட நடுத்தர பாடசாலை மாணவர்கள் கட்டாய பாடங்கள் மூன்றில் ஆகக்கூடியது ஒரு புள்ளி 4இற்கு குறைவாக இருந்தால் நிபந்தனையற்று அடுத்த தவணைக்கு வருவர். இவ்வாறு ஜெர்மன், பிரெஞ்சு அல்லது கணித பாடங்களில் ஒன்றில் மட்டுமே அடையமுடியும். அப்படி இல்லாதுவிடில் தொடரும் தவணை மாற்றம் தற்காலிகமானது. இந்த வகுப்பேற்ற நிபந்தனைகளை தொடர்ந்து இரண்டு வருடங்கள் பூரத்திசெய்யாவிடில், அதைத்தொடர்ந்து அடுத்து உள்ள குறைவான பாடசாலை மாதிரிக்கு நிலைஇறக்கம் செய்யப்படுவர் அல்லது அவ்வகுப்பைத் திரும்பக்கற்பர்.

ரே-ஆல் மாணவர்கள் அதிகப்படியான கட்டாய பாடங்களில் 4 புள்ளிகள் அல்லது அதற்கு மேல் இருந்தல் வேண்டும். இவர்கள் நிபந்தனையற்று அடுத்த தவணைக்கு மாற்றப்படுவர்.

பொதுவாக நடுத்தரப்பாடசாலைக்கு உரிய வகுப்பேற்றம் 6ம் பாடசாலை ஆண்டு நிறைவில் நடைபெறும். முதலாவது ரே-ஆல் பாடசாலை வருடத்தில் இருந்து மாற்றம் அதாவது 7ம் ஆண்டின் பின்னரும் மாற்றம் நடைபெறச் சந்தர்ப்பமுண்டு.

## வகுப்பேற்ற நடைமுறைகள்

6ம் பாடசாலை ஆண்டின் முதலாம் தவணையில் ஆசிரியர் எந்த கற்கும் திறமைத் தரத்தில் ஒரு மாணவி அல்லது மாணவன் மத்தியதர நிலை I இல் கற்பிக்கப்படவேண்டும் என்ற வரையறையினூடு வகுப்பேற்ற நடைமுறைகளை தெளிவுபடுத்துவார். இந்நடைமுறைகளின் குறிக்கோள் பிள்ளைகள் அவர்களின் திறமைகள் அல்லது ஊகிக்கப்படும் விருத்தியின் படி எந்த பாடசாலை மாதிரி அல்லது எந்த திறமை தர பாடங்களிற்கு பிரிக்கப்படும்போது மிகநல்ல முறையில் ஆதரவளிக்கப்படக்கூடும் என்பதே. இத்தீர்மானத்தின் அடிப்படையாக பிரிப்பது தொடர்பான ஆசிரியர், பெற்றோர் மற்றும் மாணவி அல்லது மாணவனின் பார்வையில் உருவான வகுப்பேற்ற அறிக்கை அமையும். ஐந்தாம் பாடசாலை ஆண்டு மதிப்பீட்டு அறிக்கை எதிர்கால வளர்ச்சியை நன்றாகக் கணிக்கக்கூடிய சேவையை வழங்கும்.

## பெற்றோருக்கு அவதானித்தல் உதவிகள்

பின்வரும் வினாக்கள் பெற்றோருக்கு அல்லது பாதுகாவலருக்கு எதிர்காலப் பாடசாலைக்குச் செல்லுதல் என்னும் நோக்குடன் அவதானிக்கவும் அத்துடன் அவர்களின் பிள்ளையின் மதிப்பிடுதலுக்கும் ஆலோசனை கூறக்கூடும்.

- உங்கள் பிள்ளை கற்றலில் ஆர்வம் காட்டுகின்றதா?
- அவன் அல்லது அவளால் நன்றாக மனகுவிப்பை மேற்கொள்ளமுடியுமா?
- உங்கள் பிள்ளையிடம் குறிப்பிடக்கூடிய பொறுமையுள்ளதா?
- எதைப்பற்றி ஒரு வேலை செல்கின்றது என்பதையிட்டு உங்கள் பிள்ளைக்கு விரைவில் ஒரு கருத்து ஏற்படுகின்றதா?
- ஒரு வேலையின் தீர்வை காணமுற்படும் போது உங்கள் பிள்ளையால் நன்கு சிந்திக்க முடிகின்றதா?
- ஒரு கடுமையான வேலையைச் செய்வதற்கு அவன் அல்லது அவள் முயற்சிக்கின்றானா/ முயற்சிக்கின்றாளா?
- உங்கள் பிள்ளை சுயமாக வேலைசெய்கின்றதா?
- உங்கள் பிள்ளை கவனமாக வேலைசெய்கின்றதா?
- உங்கள் பிள்ளையால் தனது வீட்டுவேலையை உதவியின்றி செய்யமுடிகின்றதா?

## தகவலளிக்கும் நோக்கான வேலைகள்



6ம் வகுப்பில் இவ்வாறான தகவலளிக்கும் நோக்கான வேலைகள் ஆசிரியர்களினால் நடாத்தப்படுகின்றன. இவை விசேட முன்னறிவித்தலின்றி கட்டாய கற்பித்தல் வேளையில் நடாத்தப்படுகின்றன. இவை அப்பிரதேசத்திலுள்ள ஏனைய ஆசிரியர்களுடன் இணைந்து திட்டமிடப்பட்டு, நடாத்தப்பட்டு அத்துடன் மதிப்பீடு செய்யப்படுகின்றன. இவ்வாறு அநேக வகுப்புகளின் பெறுபேறுகளை ஒப்பிடுவதுடன், நடுநிலையான மதிப்பீடு செய்யவும் முடியும். அத்தோடு இத்தகவலளிக்கும் நோக்கான வேலைகள் ஆசிரியர்களிற்கு தங்கள் மதிப்பீட்டு அளவீடுகளை சரிபார்க்கவும் சந்தர்ப்பமளிக்கும். இந்த வகுப்பேற்ற நடவடிக்கைகளில் அனைத்து மாணவர்களும் உள்ளடக்கப்படுவர்.

## வகுப்பேற்ற அறிக்கை

வகுப்பாசிரியர் வகுப்பில் கற்பிக்கும் ஏனைய ஆசிரியர்களிடம் இருந்து சென்ற தவணையில் ஜெர்மன், பிரெஞ்சு மற்றும் கணித பாடஅறிவுத் திறன் அத்துடன் வேலை மற்றும் கற்றல் தொழிற்பாட்டின் தகவல்களை பெற்று ஓர் வகுப்பேற்ற அறிக்கையைத் தொகுப்பார். இந்த மதிப்பீடுகளினதும், ஊகிக்கப்படும் விருத்தி தீர்மானத்தினதும் அடிப்படையில் 7ம் பாடசாலை ஆண்டிற்கு பிரிக்கப்படும் பரிந்துரை வழங்கப்படும்.

**வகுப்பேற்ற அறிக்கைகுறிப்பு**
வகுப்பேற்ற அறிக்கைகுறிப்பு மூன்று வெவ்வேறு எண்ணங்களை ஒருங்கிணைத்திருக்கும், அது பின்வருபவற்றினால் உருவாக்கப்பட்டிருக்கும்.

- ஆசிரியரின் வகைப்படுத்தும் சிபாரிசு
- மாணவன் அல்லது மாணவியின் வகைப்படுத்தும் விருப்பம்
- பெற்றோர் அல்லது பாதுகாவலரின் வகைப்படுத்தும் விருப்பம்

**வகுப்பேற்ற கலந்துரையாடல்**

6ம் பாடசாலை வருடத்தின் ஜனவரி மாத இறுதியில் பெற்றோர் அல்லது பாதுகாவலர் தங்கள் பிள்ளையின் வகுப்பேற்ற அறிக்கை மற்றும் வகுப்பேற்ற அறிக்கைக்குறிப்பை கருத்திற் கொள்வதற்கு பெற்றுக்கொள்வர். அதன் பின்னர் இவ்வனைத்து நடவடிக்கைகளினதும் மையமான வகுப்பேற்ற கலந்துரையாடல் நடைபெறும். இதனில் பெற்றோர் அல்லது பாதுகாவலர், மாணவி அல்லது மாணவன் மற்றும் வகுப்பாசிரியர் பங்குகொள்வர்.

வகுப்பேற்ற கலந்துரையாடலின் குறிக்கோள் ஓர் ஒருமித்த வகைப்படுத்தும் விண்ணப்பத்தை உருவாக்கல். இதனால் இக்கலந்துரையாடலின் பின்னர் வகுப்பாசிரியர் வகுப்பேற்ற அறிக்கைகுறிப்புடன், இங்கு உருவாக்கப்பட்ட விண்ணப்பத்தையும் பாடசாலைக் குழுவிற்கு அனுப்புவர்.

ஒரு ஒருமித்த வகைப்படுத்தும் விண்ணப்பத்தை உருவாக்கமுடியாவிடில், ஆகக்குறைந்தது பாடசாலைக் குழுவின் அங்கத்தவர் ஒருவர் பங்குகொள்ளும் ஒத்துப்போகும் கலந்துரையாடல் ஒன்று நடைபெறும். இதன்போது வகுப்பாசிரியர் பெற்றோர் அல்லது பாதுகாவலர், வேறு நபர்கள் போன்றோருடைய ஆலோசனையைக் கேட்கமுடியும். மீண்டும் ஒத்துப்போக முடியாத நிலை ஏற்படுமெனில், வகுப்பாசிரியரின் விண்ணப்பத்துடன் பெற்றோர் அல்லது பாதுகாவலரதும் பாடசாலைக் குழுவின் முன்வைக்கப்படும்.

**வகுப்பேற்ற தீர்மானம்**

6ம் பாடசாலை ஆண்டின் வகுப்பேற்ற தீர்மானத்தை பாடசாலைக் குழுவே பொறுப்பெடுத்து வகுப்பேற்ற அறிக்கையின் அடிப்படையில் நிர்மானிக்கும். ரே-ஆல், நடுத்தர மற்றும் விசேட நடுத்தர பாடங்களை வழங்கும் பாடசாலைகள் ஜெர்மன், பிரெஞ்சு மற்றும் கணிதம் ஆகிய ஒவ்வொரு பாடத்திலும் திறமை தரம் வகைப்படுத்தலை நிகழ்த்தும். யார் இந்த மூன்று பாடங்களிலும் குறைந்தது இரண்டு பாடங்களில் நடுத்தரபாடசாலை அல்லது கிரமமாக விசேடநடுத்தர பாடசாலை திறமை தரத்தில் உள்ளனரோ, அவர்கள் மேற்குறிப்பிட்ட பாடசாலை மாணவர்களாக இருப்பார்கள்.

**பரீட்சார்த்த தவணை**

நடுத்தர மற்றும் விசேட நடுத்தர பாடசாலை மணவர்களிற்கு 7ம் வகுப்பின் முதலாம் தவணை பரீட்சார்த்த தவணை. இத்தவணை இறுதியில் 7ம் பாடசாலை ஆண்டிற்கு பொறுப்பான பாடசாலை குழுவிற்கு திடமான வகைப்படுத்தும் தீர்மானத்திற்கான விண்ணப்பம் ஆசிரியர் குழுவினால் அனுப்படும்.

**விசேட விதிமுறைகள்**

பேர்ண் மாநிலத்தில் மத்தியதர நிலை I இற்கு வகுப்பேற்றப்படுவது அடிப்படையில் ஒரேமாதிரி வரையறை செய்யப்பட்டுள்ளது. பிறமொழி பேசுபவர்களிற்கு, புதிதாக இணைந்த பிள்ளைகளிற்கு அல்லது சுகவீனம் காரணமாக நீண்டகாலம் பாடசாலைக்கு செல்லமுடியாது இருந்தவர்களிற்கு விசேட விதிமுறைகள் சாத்தியம்.